[1968 பிப்ரவரி 17

*63 வின.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உணவு, வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்திற்கு மேய்ச்சல் காடுகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், எந்த இடங்களில், எவ்வளவு ஏக்கர் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளன?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) Yes.

(b) The right to cut and remove the grass from the Kolukkattai grass plots extending over 102 acres at Chennimalai and Voipadi Plots of Bhavani Range, Coimbatore District has been leased out to Tirupur Co-operative Milk Supply Society for a period of three years.

திரு. சு. துரைசாமி: கூட்டுறவு பால் விநியோகச் சங்கங்களுக்கு மேய்ச்சல் காடுகள் ஒதுக்கப்படுவதன் நோக்கம் என்ன? அந்த நோக்கத்தைப் பாழ்படுத்தக்கூடிய முறையில் கூட்டுறவுச் சங்கம் நடந்து கொண்டு இருந்தால் நடவடிக்கை எடுப்பதன் மூலமாக இனிமேலாவது அப்படிப்பட்ட தவறுகளைத் தடுக்க முடியும் என்பதை உணர்ந்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: என்ன மாதிரியான தவறு செய்தது என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், தவறு நேர்ந்திருக்குமானல் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தவறாது.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலிலே திருப்பூர் பால் விநியோக சொசைடிக்கு சென்னிமலைப் பகுதியிலே நிலம் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது வன இலாகாக்குச் சொந்தமானது என்று சொல்கிறார்கள். அது என்னுடைய தொகுதி அந்த நிலங்களைக் கூட்டுறவு பால் விநியோக சங்கம்தான் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு அது அனுபவிக்காமல் கூட்டுறவுச் சங்கத்திற்கு வேண்டிய ஒரு பெரிய பிரமுகருக்குக் கொடுத்து வருகிறது என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்தருக்கிறதா, அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அப்படிப்பட்ட புகார்கள் இப்பொழுதுதான் முதன்முதலாக அரசாங்கத்திற்கு வருகின்றன. அவை உண்மையா என்பதைப்பற்றி தொடர்ந்து பரிசீலிக்கப்படும்.

திரு. எம். எஸ். மணி: தலைவரவர்களே, மேய்ச்சல் காடுகளுக்கு என்று நிலங்களை வாங்கி கொண்டு இன்றையதினம் விவசாயம் செய்து கொண்டு சிலர் பலன் பெறுகிறார்கள் என்ற தகவல்கள் அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கிறதா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

(விடை இல்லை)

1968 பிப்ரவரி 17]

திரு. சி. கோவிந்தராசன் : இந்தப் பால் சொசைட்டியிலே எப்படிப்பட்ட ஊழல்கள் இருக்கின்றன என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். எப்படிப்பட்ட ஊழல்கள் என்று சொல்லும்பொழுது பணத்தைக் கையாடுகிறார்கள், அதுமட்டுமல்ல, மற்றொருவர் பெயரில் பொய்க் கையெழுத்திட்டுப் பணத்தை வாங்குகிறார்கள் என்ற தகவல்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்து போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கும்பொழுது பால் கோவாப்ரேடிவ் சொசைட்டிகளின் ரிஜிஸ்திரார் விசாரணைக்குரிய தஸ்தாவேஜுகளைக் கொடுக்க மறுக்கிறார், ஆகவே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அம்மாதிரி ஒழுங்கீனங்கள் கையாடல்கள் ஏற்பட்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் அரசாங்கம் எந்த எந்த காரியங்களைச் செய்ய வேண்டுமோ அதற்குரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள். அவர்களே கவனத்திற்குக் கொண்டு வந்த நிகழ்ச்சியின் மீது அரசாங்கம் எவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதும் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும்.

திரு. சு. துரைசாமி : கூட்டுறவு பால் விநியோகக் சங்கங்களுக்குக் காடுகளைக் குத்தகைக்கு எடுப்பதன் நோக்கம் அது மட்டுமல்ல. கிடைக்கக்கூடிய தீவனங்களைக் கால்நடைகளுக்கு ஏராளமான முறையில் கொடுத்து அதிகமாகப் பால் உற்பத்தி செய்ய வேண்டுமென்பது நோக்கமாக இருக்க வேண்டும். முன்பு அமைச்சராக இருந்த ஒருவருடைய உறவினர் என்ற காரணத்திற்காகக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எடுக்கப்பட்ட நிலத்தை தனிப்பட்ட அந்த அமைச்சரின் உறவினர் ஒருவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் மீது இனிமேலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே கூறினேன். அதுபற்றி அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. எம். கண்ணப்பன் : திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்தில் நாள் ஒன்றுக்கு எவ்வளவு பால் சேமித்து அனுப்பப் படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூல வினாவிற்குச் சம்பந்தமான துணை வினாவை திரு. பி. வேலுசாமி அவர்கள் கேட்பார்கள்.

திரு. பி. வேலுசாமி : இந்த திருப்பூர் பால் சொசைடியானது வெகு காலமாக நடந்து வருகிறது. இதற்கு வருஷா வருஷம் மானியம் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இதுவரை மானியத்தைக் கொண்டு வாங்கப்படுகிற கால்நடைகளில் எத்தனை உயிரோடு இருக்கின்றன ? எத்தனை இறந்து விட்டன ?

(விடை இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூல வினாவை ஒட்டியதாக இல்லை.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(i) பல்லடம் வட்டத்தில் கடன், கிஸ்தி வசூலைத் தள்ளி வைத்தல்

திரு. கே. என். குமாரசாமி: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 42-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட ஒற்றிவைப்புத் தீர்மானத்தை இச் சபையில் கொண்டுவர முன்னறிவிக்கை கொடுத்திருக்கின்றேன் :

"கடந்த பல மாதங்களாகப் பல்லடம் தாலுகாவில் பருவ மழை தவறிவிட்டதால் பஞ்ச நிலைமையேற்பட்டு கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் விவசாயம், கால்நடை, தீவனம், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை, இவை எல்லாம் பாதிக்கப்பட்டுள்ள நிலைமையில் விவசாயிகளின் கடன் கிஸ்தி வசூல் செய்வதில் நிர்பந்தப்படுத்துவது பற்றி விவாதிக்க இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்."

தலைவர் அவர்களே, இப்போது அந்தப் பிரதேசத்தில் இருக்கிற விவசாயிகளிடமிருந்து கடன், கிஸ்தி எல்லாம் வசூல் செய்து வருகிறார்கள். அதைக் கட்ட வேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்தப்படுகிறார்கள். இதை யெல்லாம் வசூலிக்காமல் வருகின்ற வருஷம் வரை தள்ளிப் போடுவது நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பல்லடம் தாலுகாவில் பருவ மழை தவறியதோடு கூட, வழக்கமாகவே செழிப்பான கோவை மாவட்டத்தில் மிகத் துயரமான நிலைமைக்கு ஆளாகிறவர்கள் பல்லடம் தாலுகா மக்கள் செழுமையான காலத்தில் கூட அங்கு சிரமங்கள் அதிகம். கனம் உறுப்பினர் அவர்கள் இது பற்றிய தம்முடைய கருத்தை கவர்னர் அவர்கள் உரை மீதான விவாதத்தின் போதும், ஒரு மாத காலம் நடைபெற இருக்கிற பட்ஜட் கூட்டத்தின் போதும் தெளிவாக எடுத்துக் கூறலாம். அங்குள்ள நிலைமைகளை, சிரமங்களைப் பற்றிக் கண்டிப்பாக எடுத்துச் சொல்ல எல்லா விதமான உரிமையும் உண்டு. அரசாங்கமும், பல்லடம் மாவட்டம் மட்டுமல்லாமல் சிரமங்கள் இருக்கின்ற பகுதிகளுக் கெல்லாம் அந்தச் சிரமங்களைப் போக்கும்